DEREK
PRINCE
MINISTRIES - INDIA

Free Copy

நம்பிக்கை

- PART 2



நம்பிக்கைக்கு விசுவாசத்தோடிருக்கும் தொடர்பு

வாழ்க்கையை குறித்து ஒரு முழுவதும் புதுமையான கண்ணோட்டத்தை கொடுக்கக்கூடிய ஒரே வார்த்தை உண்டு. அந்த வார்த்தை "நம்பிக்கை" என்பதாகும். நம்பிக்கையற்று இருப்பதை விட சோகமான ஒன்றை என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. ஆனால், கிறிஸ்தவர்கள் உட்பட, இன்று உலகில் இருக்கும் கோடி கணக்கான மக்களின் நிலமை அது தான். தேவனுடைய வார்த்தையிலிருந்து வரும் நற்செய்தி இது தான்: நம்பிக்கை நம்பிக்கையின்மையை வெல்லும்! ஆகையால் தான் நம்முடைய ஐந்து பகுதிகள் கொண்ட போதனை கடிதத்திற்கு இக்கருத்தை நான் தேர்ந்தெடுத்துள்ளேன்: நம்பிக்கை.

பல ஆண்டகளுக்கு முன், நம்பிக்கை தேவைப்படும் ஒரு சூழ்நிலையில் நான் இருந்தேன். அந்த சூழ்நிலையில் பரிசுத்த ஆவியானவர் என்னை நேரடியாக வேதத்திற்கு அழைத்து சென்றார் - அங்கே என் தேவையை சந்தித்தார். உங்கள் சூழ்நிலையும் இப்படி தான் இருந்தார், இந்த தொடர் உங்களுக்கு தான். மறுபடியும் உண்மையான நம்பிக்கையை நீங்கள் அனுபவிக்கலாம். நம்பிக்கை எவ்வளவு முக்கியமானது என்பதை புரிந்துக்கொள்ள இத்தொடர் உங்களுக்கு உதவி செய்யும் என்று நம்புகிறேன். முக்கியமாக, அதை பெற்றுக்கொள்வது எப்படி என்பதை புரிந்துக்கொள்ள உதவும்.

மூன்று நிலையான உண்மைகள்

இத்தொடரின் 1-ம் பாகத்தில், மூன்று நிலையான உண்மைகளை ஆராய்ந்து நம்முடைய ஆராய்வை துவங்கினோம். இவ்வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் பெரும்பாலான காரியங்கள் வந்து செல்லலாம் ஆனால் என்றென்றும் நிலைத்திருக்கும் மூன்று ஆவிக்குரிய உண்மைகள் உள்ளன - விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு. 1 கொரிந்தியர் 13:13ல் இம்மூன்றையும் பவுல் முன் நிறுத்துகிறார்:

> *இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது.*

ஒவ்வொரு நற்பண்பின் சில குணாதிசயங்களையும் நாம் கண்டுப்பிடித்தோம். விசுவாசம் கிரியை அல்லது செயலை உண்டாக்க வேண்டும், ஏனென்றால், கிரியையின்றி, அது செத்த விசுவாசமாயிருக்கிறது. அன்பு உழைப்பை உண்டாக்கும்; மற்றவர்கள் சார்பாக, கடினமான, தியாகமான, தன்னையே கொடுக்கின்ற உழைப்பை உண்டாக்கும். அன்பு வெறும் மதத்திற்கடுத்த பண்புள்ள பேச்சை பயன்படுத்துவதில்லை; அன்பு வெறும் மதத்திற்கடுத்த பண்புள்ள பேச்சை பயன்படுத்துவதில்லை; அன்பு தன் கையை பலப்படுத்தி, மிக கடினமான இடத்தில் வேலை செய்ய ஆரம்பிக்கிறது. நம்பிக்கையின் முக்கியமான தனித்தன்மைகளை நாம் சிந்திக்கும் போது, நம்பிக்கைக்கு நாம் மூன்று வார்த்தைகளை பயன்படுத்தலாம்: உறுதி, பொறுமை அல்லது சகிப்புத்தன்மை மற்றும் விடாமுயற்சி.

விசுவாசம் கிரியை உண்டாக்குகிறது. அன்பு உழைப்பை உண்டாக்குகிறது. நம்பிக்கை உறுதி, பொறுமை அல்லது சகிப்புத்தன்மை மற்றும் விடாமுயற்ச்சியை உண்டாக்குகிறது. நம்பிக்கை தரும் பொறுமை உங்களுல் இல்லாவிடில், விசுவாசம் மற்றும் அன்பின் பயன்களை நீங்கள் இழப்பது அதிக நிச்சயம்.

நம்பிக்கையின் தன்மை

நம்முடைய முந்தைய பாடத்தில் நம்பிக்கையின் மற்ற இரண்டு தன்மைகளையும் நாம் சிந்தித்தோம்.முதலாவது, இந்த கேள்வியை கேட்டோம்: நம்பிக்கை எப்படி வருகிறது? 1 பேதுரு 1:3ல் பேதுரு இதற்கான பதிலை கொடுக்கிறார்:

> *நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அவர், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.*

இயேசு கிறிஸ்துவில், விசுவாசத்தின் மூலம் மறு பிறப்படைவதின் நேரடி விளைவாக நம்பிக்கை இருக்கிறது. புதிய பிறப்பு தான் நம்மை ஜீவனுள்ள நம்பிக்கைக்குள் கொண்டு வருகிறது. நாம் ஏதோ ஒரு மரித்த இறையியல் அல்லது தத்துவத்திற்குள் மறு பிறப்படையவில்லை, மாறாக ஜீவனுள்ள, அதிர்வூட்டும் எதிர்ப்பார்ப்பிற்குள் பிறந்துள்ளோம். இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தபோது, அதுவே நம்பிக்கையின்மையின் மீது நம்பிக்கையின் இறுதி வெற்றியாக அமைந்தது!

“விசுவாசத்தின் மூலம் இயேசு கிறிஸ்துவுக்குள் மறுபிறப்பு அடைவதின் நேரடி விளைவு நான் நம்பிக்கை”

இரண்டாவதாக, நம்பிக்கைக்கு ஒரு இலக்கு இருக்க வேண்டும் என்று கற்றுக்கொண்டோம் - அது ஏதோ ஒன்றை மையமாக கொண்டிருக்க வேண்டும். இதை நாம் 1 பேதுரு 1:13ல் வாசிக்கிறோம்:

> *ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்தபுத்தியுள்ளவர்களாயிருந்து, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங்கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்.*

நாம் எல்லாரும் ஒரு செயல்முறைக்குள்ளாக இருக்கிறோம் - இரட்சிப்பின் செயல்முறை - ஆனால் அது இன்னும் பூரணமடையவில்லை. இயேசு கிறிஸ்துவின் வருகையினால் இது நிறைவடையும். இதற்கிடையில், அவருடைய வருகையின் மீது நம்முடைய நம்பிக்கையை முழுமையாக செலுத்துவதே நமக்களிக்கப்பட்டிருக்கும் ஆணை.

ஆகையால், நமது முந்தைய கடிதத்தில், நம்பிக்கை அத்தியாவசியமானது - அது ஜீவனுள்ளதும், அசைகின்றதாயும் உள்ளது - நம்முடைய நம்பிக்கையின் மையமே இயேசு கிறிஸ்துவின் வருகை அல்லது அவருடைய வெளிப்படுதல் தான் என்பதை கற்றுக்கொண்டோம்.

விசுவாசம் மற்றும் நம்பிக்கை

நம்பிக்கையின் கருப்பொருளின் அப்பகுதியில், விசுவாசத்திற்கும் நம்பிக்கைக்கும் உள்ள தொடர்பை நாம் ஆராயபோகிறோம். பல்லாண்டுகளாக, நான் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களுக்கு ஊழியம் செய்கையில், ஒரு நிலையான போக்கு வெளிப்பட ஆரம்பித்துள்ளதை கவனிக்கிறேன். என்னுடைய தனிப்பட்ட அனுபவத்திலிருந்து, அநேக கிறிஸ்தவர்கள் விசுவாசத்தை நம்பிக்கையுடனும், நம்பிக்கையை விசுவாசத்துடனும் குழப்பிவிடுகிறார்கள் என்பதை கண்டுப்பிடித்துள்ளேன்.

விசுவாசத்திற்கும் நம்பிக்கைக்கும் உள்ள தொடர்பை அறிமுகம் செய்ய, ஒரு முக்கியமான வித்தியாசத்தை சுட்டி காண்பித்து ஆரம்பிக்க விரும்புகிறேன்: விசுவாசம் தற்காலத்தில் உள்ளது, நம்பிக்கை எதிர்காலத்தில் உள்ளது. எதிர்காலத்திலுள்ள விசுவாசமே உங்களுக்கு உண்டென்றால், அது உண்மையில் விசுவாசமே அல்ல. உங்களுக்கிருப்பது நம்பிக்கை தான். உதாரணத்திற்கு, என்னிடம் ஜெபிக்க வரும் மக்களிடம், எனது முதல் கேள்வி, "தேவன் இதை செய்ய முடியும் என்பதை விசுவாசிக்கிறீர்களா?" என்பதாகும். அநேக நேரங்களில், "அவர் செய்வார் என்று விசுவாசிக்கிறேன்" என்று தான் கூறுவார்கள். ஆனால் அவர்கள் குரலில் ஏதோ ஒன்று, தேவன் அதை செய்ய வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பை தான் வெளிப்படுத்தியது. விசுவாசத்திற்கு தேவன் வாக்களித்துள்ள விளைவுகள் நம்பிக்கையிலிருந்து வருகிறவைகள் அல்ல என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். இவ்வொவ்வொன்றும் முக்கியமானது தான்; ஆனால் ஒன்றுக்கு ஒன்று மாற்று பொருளல்ல.

விசுவாசத்தின் உறுதி

விசுவாசத்திற்கான வேதாகம பொருள் விளக்கத்தை நாம் பார்க்கலாம் (தற்செயலாக, இதில் நம்பிக்கை என்ற வார்த்தையும் உள்ளடக்கப்பட்டுள்ளது). எபிரெயர் 11:1-3:

> *விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. அதினாலே முன்னோர்கள் (அதாவது, பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள்) நற்சாட்சிபெற்றார்கள். விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய் காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்.*

இவ்வசனங்கள் பல முக்கியமான அறிக்கைகளை உள்ளடக்குகின்றன. முதலாவது, விசுவாசம் ஒரு உறுதி என்று கவனிக்கிறோம். அது வெறும் தத்துவம் அல்ல; அது வெறும் இறையியல் அல்ல, அது வெறும் உபதேசம் அல்ல. விசுவாசம் இல்லாமல் அவைகள் எல்லாம் உங்களுள் இருக்கக்கூடும். உண்மையாகவே, விசுவாசம் நமக்கொரு "உறுதியாக" இருக்க வேண்டும். உறுதி என்ற கிரேக்க வார்த்தைக்கான அர்த்தம் "ஏதோ ஒன்றின் அடிப்படை அல்லது அடித்தளம்" என்பதே. வசனம் 1 கூறுகிறது: "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியாய் இருக்கிறது." நம்பிக்கை உண்மையானதாய் இருக்க, அது விசுவாசத்தின் மேல் கட்டப்பட வேண்டும்.

அதுமட்டுமல்ல, விசுவாசம் காணப்படாதவைகளை அடிப்படையாய் கொண்டிருக்கிறதென்று நாம் காண வேண்டும். இறுதியாக, விசுவாசம் தேவனுடைய வார்த்தையை சார்ந்திருக்கிறது. அதின் விளைவாக, காணப்படுகிற முழு பிரபஞ்சமும், காணப்படாத தேவனுடைய வார்த்தையினால் உண்டானது என்ற உண்மையை விசுவாசம்

பற்றிக்கொள்ளுகிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால், நாம் காண்கிற யாவும், காண முடியாதவைகளிலிருந்து உருவாயின. நம்முடைய விசுவாசம் காணப்படாத, நித்தியமான தேவனுடைய வார்த்தையின் உண்மையை சார்ந்திருக்கிறது. நம்பிக்கை, விசுவாசத்தை சார்ந்திருக்கிறது.

நான் ஏற்கனவே சொன்னது போது, (மறுபடியும் சொல்வதில் தவறில்லை ஏனென்றால் இது அவ்வளவு முக்கியமானது) - விசுவாசம் என்பது, இப்போது, இங்கே என்பதாகும். விசுவாசம் ஒரு நிச்சயம், இப்போதே நம்மிடத்தில் உள்ள ஒன்று. ஆனால் அந்த விசுவாசத்தை அடிப்படையாக கொண்ட நம்பிக்கை, எதிர்காலத்தை நோக்கி பார்க்கிறது. இவை இரண்டையும் குழப்பி விடாதீர்கள், ஏனென்றால் தேவன் விசுவாசத்திற்கு வாக்களித்திருக்கும் பலன்களை, நம்பிக்கைக்கு பலனாக கொடுக்கப்படுவதில்லை. விசுவாசத்தை அடிப்படையாக கொண்டிருந்தால் மட்டுமே நம்பிக்கை சரியானதாய் இருக்கிறதென்று உணர்ந்துக்கொள்வது அவசியம். விசுவாசம், தேவனுடைய வார்த்தையில் அடிப்படை கொண்டது. ஆகவே, விசுவாசம் மற்றும் நம்பிக்கை, இரண்டின் இறுதியான அடிப்படை தேவனுடைய வார்த்தை தான்.

நம்பிக்கையின் வரையறை

அநேகர், தங்களுக்கு நம்பிக்கை உண்டென்று எண்ணுகிறார்கள். அந்த வார்த்தையின் பயன்பாட்டை அவர்கள் நியாயப்படுத்தலாம், ஆனால் அவர்கள் "நம்பிக்கை" என்ற வார்த்தையை பயன்படுத்தும் விதம், அவ்வார்த்தையின் வேதாகம அர்த்தத்துடன் ஒத்துப்போவதில்லை. உண்மையான மற்றும் தற்காலத்தில் உள்ள விசுவாசத்தின் நிச்சயத்தில் அடிப்படைக்கொண்ட நம்பிக்கை இருந்தால் மட்டுமே, நீங்களும் நானும் நமக்கு நம்பிக்கை உண்டென்று சொல்ல தகுதி பெறுகிறோம். அப்போது தான் வேதாகமத்தின் அடிப்படையிலான நம்பிக்கையை கொண்டிருப்பதை குறித்து நாம் பேசுகிறோம். வேறு எந்த விதமான நம்பிக்கையும் வெறும் விரும்பத்தக்க சிந்தையாகவே உள்ளது. அப்படிப்பட்ட நம்பிக்கை நிறைவேறலாம், ஆனால் அதற்கு எந்த உறுதியும் இல்லை. உண்மையான விசுவாசத்தின் அடிப்படையிலான நம்பிக்கை மட்டுமே, நிறைவேற்றப்படும் என்ற உறுதிக்கொண்ட நம்பிக்கையாகும்.

> *"உண்மையான, தற்காலத்திலுள்ள விசுவாசத்தின் நிச்சயத்தில் அடித்தளம் கொண்ட நம்பிக்கை நமக்கிருக்கும் போது தான், நமக்கு நம்பிக்கை உண்டென்று நாம் கூற முடியும்"*

ஆகவே, விசுவாசம் தற்காலத்தில் உள்ளது என்பதை மனதில் கொள்ளுங்கள். விசுவாசம் ஒரு நிச்சயம். விசுவாசம் இப்போது, இங்கு என்பது. விசுவாசம் தேவனுடைய வார்த்தையின் காணப்படாத உண்மையை சார்ந்தது. நம்பிக்கை, அந்த விசுவாசத்தை சார்ந்தது. உண்மையான விசுவாசத்தை அடிப்படையாக கொண்டிருக்கும் நம்பிக்கையே நிறைவேற்றப்படும் என்ற உறுதிக்கொண்டது. ஆனால், வேறு எந்த விதமான நம்பிக்கையும் வெறும் விரும்பத்தக்க சிந்தையாகவே உள்ளது.

நம்பிக்கைக்கு என்னுடைய சொந்த பொருளடக்கத்தை நான் முன்வைக்கிறேன். வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள நம்பிக்கையை நான் இப்படியாக புரிந்துக்கொள்ளுகிறேன்: *நம்பிக்கையென்பது ஒரு சாந்தமான, உறுதியான, நன்மை வரும் என்ற எதிர்பார்ப்பாக இருக்கிறது.* அதை நான் மறுபடியும் கூறுகிறேன்: அதை நான் மறுபடியும் கூறுகிறேன்: *நம்பிக்கையென்பது ஒரு சாந்தமான, உறுதியான, நன்மை வரும் என்ற எதிர்பார்ப்பாக இருக்கிறது.* நம்பிக்கை சாந்தமானது மற்றும் உறுதியானதாக இருக்கிறது.

நம்பிக்கையை நாடுதல்

நான் ஏற்கெனவே நம்பிக்கையின் ஒரு அம்சத்தை கூறினேன், ஆனால் அது மிகவும் முக்கியமானதாக இருப்பதால், அதை இன்னும் உன்னிப்பாக கவனிப்போம். நம்பிக்கையின் அந்த அம்சத்தின் சாராம்சத்தை நான் இங்கு முன்வைக்கிறேன்: எல்லா உண்மையான நம்பிக்கையின் இறுதி கவனமும், மகிமையோடு திரும்பும் இயேசு கிறிஸ்துவின் வருகை தான். இவ்வுண்மையை தீத்து 2:11-13ல் பவுல் உறுதி செய்கிறார்:

> *ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகிய, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது...*

> *"மகிமையில் வருகைத்தர போகும் இயேசு கிறிஸ்துவின் வருகையே, எல்லா உண்மையான நம்பிக்கையின் இறுதி நோக்கமாக இருக்கிறது."*

இந்த கடைசி வசனம், 13ம் வசனம், அப்பகுதிக்கான தாக்கத்தை ஏற்படுத்தும் வசனம் என்று சொல்லலாம். அது என்ன சொல்கிறது, *நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய*

உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட செய்திமடல் வருமானால் இமெயில் முகவரி **secretary@derekprince.in** *அல்லது அலைபேசி* **9585538202** *தொடர்புகொண்டு எந்த பெயரில், விலாசத்தில் பல செய்தி மடல்கள் வருகிறது என்பதை தெரியப்படுத்தவும்.*

உங்கள் கவனத்திற்கு!!!

உங்கள் விலாசம் மாறும் பொழுது தயவு எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

ISSUE #017

இன்னும் தேவையா ?

- ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும்------பிரதிகள் தேவை.
- தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.
- முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்.

See over for address details...

SIGN ME UP!

- தயவுசெய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்களைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.
- ஈமெயில் மூலமாக அனுப்பவும்.
- கடிதம் மூலமாக அனுப்பவும்.

இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி... காலத்தையும் கடந்து நித்தியத்திற்குள் செல்லும் கிறிஸ்தவர்களின் அந்த இறுதி நம்பிக்கைக்காக நாம் எதிர்ப்பார்த்திருக்க வேண்டும். அந்த பாக்கியமான நம்பிக்கை என்ன? அது நமது மகத்துவமான ஆண்டவரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் மகிமையான வெளிப்படுதல். (பவுல் இயேசுவை “மகா தேவன்...” என்று அழைப்பதை கவனியுங்கள்).

இயேசுவின் வருகையின் பாக்கியமான நம்பிக்கையை எதிர்நோக்குதல், நம்முடைய வாழ்வில் எவ்வித தாக்கத்தை ஏற்படுத்துகிறது? அந்த கேள்விக்கு பதிலளிக்க, 11ம் வசனத்தில், பவுலின் ஆரம்ப வார்த்தைகளுக்கு திரும்புவோம்: *ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி, ...நமக்குப் போதிக்கிறது.*

கிருபையானது நமக்கு போதிக்கிறது என்பதை கவனியுங்கள்: கிருபைக்கு நம்முடைய வாழ்வில் அந்த அதிகாரம் இருக்கிறது. என்ன செய்யும் படி நமக்கு போதிக்கிறது? “அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ண” நமக்கு போதிக்கிறது. நாம் ஏன் அப்படி வாழ்கிறோம்? ஏனென்றால் நாம் ஒரு புதிய யுகத்தை எதிர்நோக்கி உள்ளோம்; நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கியுள்ளோம். அவர் வரும் போது நாம் ஆயத்தமாக இருக்க விரும்புகிறோம், அவருடைய பிரசன்னத்திற்கு முன்பாக நாம் வெட்கப்பட விரும்பவில்லை.

ஆகவே, இயேசுவின் வருகையின் நம்பிக்கை நம்மை தெய்வீக வாழ்விற்கு நேராக ஊக்குவிக்கிறது. புதிய ஏற்பாட்டில் அதுவே மிக பெரிய ஊக்க சக்தியாக விழங்குகிறது. தனது முதல் நிருபத்தில், அப்போஸ்தலனாகிய யோவான், “அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்” என்று கூறுகிறார் (1 யோவான் 3:3). இவ்விதமான நம்பிக்கை சுய-சுத்திகரிப்புக்கு நேராக நடத்துகிறது. உண்மையான விசுவாசம் என்ற நிச்சயத்தில் அடித்தளம் கொண்ட உண்மையான நம்பிக்கையாக இருந்தால், நாம் வாழ்கிற முறையில் தாக்கத்தை அது ஏற்படுத்தும்.

காலம் மற்றும் நித்தியம்

இத்தகைய நம்பிக்கையை உண்மையாகவே கொண்டிருக்கும் ஒவ்வொரு நபரின் வாழ்விலும் அதற்குரிய அத்தாட்சி இருக்குமென்று காண்கிறோம். அப்படிப்பட்ட நபர், தன்னை தான் சுத்திகரிக்கிறார் - அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து வாழ்கின்றனர். அந்த நபர் அறிவோடு, நீதியோடு மற்றும் பக்தியோடு தற்போதைய யுகத்தில் வாழ்கிறார். மகிமையில் கிறிஸ்துவின் வருகையை கவனமாக கொண்டிருக்கும் நம்பிக்கையின் முதன்மையான விளைவு தான் இப்படிப்பட்ட நடத்தை.

இரண்டாவது விளைவு, முதல் விளைவோடு தொடர்புடையதே: இந்த நம்பிக்கையை கொண்டிருப்பது நம்மை காலம் என்னும் கட்டிலிருந்து விடுவிக்கிறது. நாம் இனி சில கால வாழ்க்கையின் அடிமைகள் அல்ல. நாம் நித்தியத்தை எதிர்நோக்குகிறோம். பேரழிவுகளை குறித்தோ, “காலத்தில்” வாழ்வதின் பிரச்சனைகளை குறித்தோ, மற்ற மக்களை போல் நாம் கவலை கொள்வதில்லை, ஏனென்றால், அவர்களுக்கு நம்மை போன்ற எதிர்ப்பார்ப்பு இல்லை. அவர்கள் கட்டுப்படுத்தப்பட்டவர்கள்; இவ்வாழ்க்கையில் தேவன் அவர்களுக்கு அளிக்கும் சில வருடங்களினுள் அவர்கள் அடைப்பட்டிருக்கிறார்கள்.

இந்த மகிமையான நம்பிக்கையை உடைய நமக்கோ, இந்த சில வருடங்கள் நித்தியத்துக்கு ஆயத்தமாகும் ஒரு காலக்கட்டமாகவே உள்ளது. இயேசு கிறிஸ்து வெளிப்படுவதை குறித்த நம்பிக்கையை கொண்டிருப்பது, நாம் வாழ்கிற விதத்தின் மேல் மிக பெரிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. உண்மையை சொன்னால், இந்த நம்பிக்கை எங்களுக்கு உண்டென்று கூறுகிறவர்களை நாம் பார்க்கும் போது, இதே அத்தாட்சியை நாம் அவர்களுடைய வாழ்வில் காண வேண்டும்.

உங்களுக்கு நம்பிக்கை

நீங்கள் எப்படி? இவ்விதமான நம்பிக்கை உங்களுக்கு உண்டோ என்று ஒருவர் கேட்டால், என்ன சொல்வீர்கள்? உங்கள் வாழ்க்கை ஆம் என்று கூறுகிறதா, அல்லது இல்லை என்று கூறுகிறதா? நீங்கள் காலத்தினால் கட்டுப்படுத்தப்பட்டவர்களை போல் உணருகிறீர்களா, அல்லது காலத்தை கடந்து நித்தியத்துக்குள் பார்த்துக்கொண்டிருக்கிறீர்களா?

ஒருவேளை அந்த கேள்விகளுக்கு எப்படி பதிலளிப்பதென்று அறியாமல் இருக்கலாம் ஆனால் நீங்கள் இப்படிப்பட்ட பாக்கியமான நம்பிக்கையினுள் கடந்து செல்ல விரும்புகிறேன் என்று சொல்லலாம். அது கொடுக்கக்கூடிய சந்தோஷத்தையும் விடுதலையும் நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். இதுவே உண்மையில் உங்கள் விருப்பமாய் இருந்தால், நாம் ஒருமிக்க ஜெபித்து, நம்பிக்கை நம்மிடத்தில் வர அனுமதிக்கும்படி ஆண்டவரிடம் கேட்டு, இந்த பகுதியை நிறைவுக்கு கொண்டுவரலாம்.

ஆண்டவரே, இக்கடிதத்தில் நான் வாசித்த நம்பிக்கை எனக்குள் உண்டென்று உறுதி எனக்கில்லை. உண்மையான அந்த நம்பிக்கையை பெற எனக்கு உம்முடைய உதவி தேவை. அதினிமித்தம் நான் உம்மேல் கவனம் வைத்து, தெய்வபக்தியுள்ள வாழ்க்கையை பின்தொடர்ந்து, காலம் என்ற கட்டிலிருந்து விடுதலை பெறுவேன்.

இப்போதே உம்முடைய வார்த்தையில் நான் விசுவாசம் வைக்கிறேன். ஆண்டவரே, நம்பிக்கை என்னிடம் வரட்டும் என்று உம்மிடம் கேட்கிறேன் - என் ஜெபத்திற்கு பதில் அளித்து விட்டீர் என்று முன்பே உமக்கு நன்றி சொல்கிறேன்.

இயேசுவின் நாமத்தில் ஆமென்.

உங்கள் விபரம்

NAME: MR / MRS / MISS ....

ADDRESS: ....

....

CITY: .... POSTCODE: ....

EMAIL: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை: ₹

Derek Prince
Ministries - India

Contact us
www.derekprince.in
admin@derekprince.in
Ph 9585538205

1-C EVR Road,
3rd Floor,(Opp.
Chinthamani Mall),
Puthur, Trichy - 620017

Derek Prince Ministries - India
www.derekprince.in